## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 7-7 - ஏழையர்
## (எம்பெருமானது திவ்ய அவயவ சௌந்தர்யம் உருவெளித்தோற்றத்தால் சூழ வந்து காட்சி அளிக்க, அதனால் வருந்தும் தலைவி சொல்லிய பாசுரம்)

3403 * ஏழையர் ஆவியுண்ணும் * இணைக்
கூற்றங்கொலோ? அறியேன் *
ஆழியங்கண்ணபிரான் * திருக்கண்கள்
கொலோ? அறியேன் **
சூழவும் தாமரை நாண்மலர்
போல் * வந்து தோன்றும் கண்டீர் *
தோழியர்காள்! அன்னைமீர்! * என்
செய்கேன்? துயராட்டியேனே 1

3404 ஆட்டியும் தூற்றியும் நின்று * அன்னைமீர்!
என்னை நீர் நலிந்தென்? *
மாட்டுயர் கற்பகத்தின் * வல்லியோ?
கொழுந்தோ? அறியேன் **
ஈட்டிய வெண்ணெய் உண்டான் * திருமூக்கு
எனதாவி உள்ளே *
மாட்டிய வல்விளக்கின் *
சுடராய் நிற்கும் வாலியதே 2

3405 வாலியதோர் கனி கொல்? *
வினையாட்டியேன் வல்வினை கொல்? *
கோலம் திரள் பவளக் *
கொழுந்துண்டங்கொலோ? அறியேன் **
நீல நெடுமுகில் போல் * திருமேனி
அம்மான் தொண்டை வாய் *
ஏலும் திசைகள்[1] எல்லாம் * வந்து
தோன்றும் என் இன்னுயிர்க்கே 3

3406 இன்னுயிர்க்கு ஏழையர் மேல் * வளையும்
இணை நீலவிற்கொல்? *
மன்னிய சீர் மதனன் * கருப்புச்
சிலை கொல்? ** மதனன்
தன்னுயிர்த் தாதை * கண்ண பெருமான்
புருவம் அவையே *
என்னுயிர் மேலனவாய் *
அடுகின்றன என்று நின்றே 4

---
[1] திசையுள்

3407 என்று நின்றே திகழும் * செய்யவீன்
சுடர் வெண் மின்னுக்கொல்? *
அன்றி என்னாவி அடும் *
அணிமுத்தங்கொலோ? அறியேன் **
குன்றம் எடுத்த பிரான் *
முறுவல் எனதாவி அடும் *
ஒன்றும் அறிகின்றிலேன் * அன்னைமீர்!
எனக்கு உய்விடமே 5

3408 உய்விடம் ஏழையர்க்கும் *
அசுரர்க்கும் அரக்கர்கட்கும் *
எவ்விடம்? என்றிலங்கி * மகரம்
தழைக்கும் தளிர்கொல்? **
பைவிடப் பாம்பணையான் *
திருக்குண்டலக் காதுகளே **
கைவிடல் ஒன்றும் இன்றி *
அடுகின்றன காண்மின்களே 6

3409 காண்மின்கள் அன்னையர்காள்! என்று *
காட்டும் வகை அறியேன் *
நாள் மன்னு வெண்திங்கள் கொல்? *
நயந்தார்கட்கு நச்சிலை கொல்? **
சேண்மன்னு நால் தடந்தோள் *
பெருமான் தன் திருநுதலே *
கோள் மன்னி ஆவி அடும் * கொடியேன்
உயிர் கோளிழைத்தே 7

3410 கோளிழைத் தாமரையும் *
கொடியும் பவளமும் வில்லும் *
கோளிழைத் தண்முத்தமும் *
தளிரும் குளிர் வான்பிறையும் **
கோளிழையாவுடைய * கொழுஞ்சோதி
வட்டங்கொல்? * கண்ணன்
கோளிழை வாள்முகமாய்க்[2] * கொடியேன்
உயிர் கொள்கின்றதே 8

3411 கொள்கின்ற கோளிருளைச் *
சுகிர்ந்திட்ட கொழுஞ்சுருளின் *
உள்கொண்ட நீல நன்னூல் தழை
கொல்? * அன்று மாயன் குழல் **
விள்கின்ற பூண்தண்துழாய் * விரை

[2] வாண்முகமாய்

நாற வந்து என் உயிரை *
கள்கின்றவாறு அறியீர் * அன்னைமீர்!
கழறா நிற்றிரே 9

3412 நிற்றி முற்றத்துள் என்று * நெரித்த
கையராய் * என்னை நீர்
சுற்றியும் சூழ்ந்தும் வைதிர் * சுடர்ச்
சோதி மணி நிறமாய் **
முற்ற இம்மூவுலகும் *
விரிகின்ற சுடர் முடிக்கே *
ஒற்றுமை கொண்டது உள்ளம் * அன்னைமீர்!
நசை என் நுங்கட்கே? 10

3413 * கட்கரிய பிரமன் சிவன் *
இந்திரன் என்று இவர்க்கும் *
கட்கரிய கண்ணனைக் *
குருகூர்ச் சடகோபன் சொன்ன **
உட்குடை ஆயிரத்துள் * இவையும்
ஒரு பத்தும் வல்லார் *
உட்குடை வானவரோடு *
உடனாய் என்றும் மாயாரே 11

**அடிவரவு:** ஏழை ஆட்டி வாலிய இன்னுயிர் என்று உய்விடம் காண்
கோளிழை கொள் நிற்றி கட்கரிய மாயா